# දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය-වවුනියාව
# மாவட்ட செயலகம்-வவுனியா
# District Secretariat - Vavuniya




**ආයතනයේ නම:- දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය -වවුනියාව.**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**நிறுவனத்தின் பெயர் :- மாவட்ட செயலகம், வவுனியா.**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Name of the institution: - District Secretariat, Vavuniya**

# 2020

Submission of observations of Hon.Minister and steps taken with regard to the reports tabled by the Parliamentary Committee on Public Accounts in terms of Standing Order No.119 (4)

**இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்கு தொடர்பாக செயற் குழுவின் சபைக்கு சமர்பிக்கப்பட்ட நிலையில் கட்டளை (119/4) தொடர்பாக அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கிறேன்.**

பாராளுமன்ற தொடர் இல : 183
மாவட்ட செயலகம் : வவுனியா

| இல | அரச கணக்கு செயற் குழுவினால் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் | கணக்கீட்டு அலுவலரால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | வருடாந்தசெயற்திட்ட தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக சிரேஸ்ட நிலை உத்தியோகத்தர் ஒருவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டு செயற்பாட்டுத்திட்டம் தயாரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் குறித்த அலுவலரினால் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. | 2023 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. |
| 2 | ஐயவினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கபெற்ற சகல ஐயவினாக்களும் சிங்கள மொழியில் மட்டும் இருந்ததினால் அவற்றினை மொழிபெயர்ப்பு செய்தே பதில் அனுப்பவேண்டியேற்பட்டது. மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் ஒரேயொரு மொழிபெயர்ப்பாளராலேயே அனைத்து மொழிபெயர்பினையும் செய்ய வேண்டியுள்ளதால் காலதாமதம் ஏற்பட்டது. தற்போது கணக்காய்வு ஐயவினாக்களிற்கு முன்னிரிமை வழங்குமாறு மொழிபெயர்ப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த காலபகுதிக்குள் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தற்போது தமிழ் மொழி மூலம் ஐயவினாக்கள் கிடைப்பதன் காரணமாக காலதாமதம் தவிர்க்கப்பட்டுள்ளது. |
| 3 | வருடாந்த பொருட்கணிப்பீடு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள் பற்றாக்குறைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவில்லை. | கொரோனா முடக்க நிலை காரணமாகவும் மற்றும் சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் கடமைக்கு அழைக்கப்பட்டதன் காரணமாகவும் வருடாந்த பொருட்கணிப்பீட்டினை நிறைவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது. சுற்றறிக்கைக்கு அமைவாக குறித்த காலப்பகுதிக்குள் கணிப்பீட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. | 2021ம் ஆண்டில் உரிய காலப்பகுதிக்குள் கணிப்பீட்டு நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 4 | ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு நாளாந்த ஓட்டக்குறிப்புகள் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்படவில்லை. | கொரோனா முடக்க நிலை காரணமாகவும் மற்றும் சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் கடமைக்கு அழைக்கப்பட்டதன் காரணமாகவும் நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள மற்றும் பொழிப்பு அறிக்கைகளை தயாரித்து அனுப்புவதில் காலதாமத் ஏற்பட்டதுடன் வாகன பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தருக்கும் அலுவலர்களுக்கும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை காலதாமதம் இனறிகணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தற்போது குறித்த மாதத்திற்கான மாதாந்த பொழிப்பு அறிக்கைகள தயாா்செய்யப்பட்டு அடுத்து வரும் மாதத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமா்ப்பிக்கப்படுகின்றது. |
| 5 | வாகனம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 6 மாதங்களுக்குக்குறைவான காலப்பகுதியில் அகற்றப்படவில்லை. | 252-9900 மற்றும் 252-9899 இலக்கம் கொண்ட இரு வாகனங்களும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் HA/05/05/17 இலக்க2021.11.10 திகதிய கடிதத்திற்கு அமைவாக நீர்பாசன திணைக்களத்திற்கு 2021ம் ஆண்டில் கையளிக்கப்பட்டுள்ளதுடன் 17-8519 இலக்க வாகனம் ஏல விற்பனையின் பொருட்டு இயந்திர இலக்கத்தினை அழிப்பு செய்வதற்காக GA/VA/FIN/07/17-8519/2022 இலக்க 12.10.2022 திகதிய கடிதமூலம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. | 17-8519 இலக்க வாகனத்திற்கான இயந்திர இலக்கத்தினை அழிப்பு செய்வதற்கான அனுமதி மோட்டாா் போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. |
| 6 | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படவில்லை. | கொரோனா முடக்க நிலை காரணமாக களவிஜயங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன். காரணமாகவும் மற்றும் சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் கடமைக்கு அழைக்கப்பட்டதன் காரணமாகவும் வாகன பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் வாகனங்களின் எரிபொருள் தகனம் பற்றிய பரிசோதனையை மேற்கொள்ள முடியவில்லை. | 2021ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 05 வாகனங்களிற்கு எரிபொருள் தகனம் பற்றிய பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. |
| 7 | உரிய திகதியில் வங்கிகணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்படவில்லை. | 2020 டிசம்பர் மாதத்திற்கான வங்கிக்கூற்று யூனியன் பிளேஸ் கிளையில் இருந்து கிடைக்க தாமதமாகியமையால் வங்கிக்கணக்கிணக்கக்கூற்று தயார்படுத்த கால தாமதமாகியது எதிர்காலத்தில் குறித்த திகதிக்குள் வங்கிக்கணக்கிணக்கக் கூற்று தயார் செய்து அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தற்பொழுது உரிய திகதியில் வங்கிகணக்கிணக்ககூற்று தயார் செய்து சமா்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 8 | 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் கூடியதாக பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படவில்லை. | 30.06.2021 வரை வருடாந்த செயலாற்றறிக்கையினை சமர்ப்பிக்க காலஅனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் 22.06.2021ம் திகதி அன்றே கணக்காய்வாளர் திணைகளத்தினால் இறுதி கணக்காய்வு அறிக்கை எமக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. பின்னர் இது இரு மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு புத்தக வடிவில் வடிவமைத்து சமர்ப்பிக்க காலதாமதம் ஏற்பட்டது. எனினும் 01.07.2021 அன்று பாராளுமன்றில் எம்மால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | 2021ம் ஆண்டுக்கான செயலாற்று அறிக்கை உரிய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 9 | அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்தொகுதியினர் இணைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள். | பட்டாதிரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் அமைச்சினாலேயே ஆளணிக்கு மேலதிகமாக நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் ஆளணி தொடர்பான அறிக்கை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு மாதத்தில் இரு தடவை அனுப்பி வைக்கப்படுகின்றது. | தற்போது மேலதிக ஆளணியே காணப்படுகின்றது. |
| 10 | நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிலைபெறுதகு நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு பரீட்சிப்பு நடவடிக்கையின் போது உரிய முறையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் தற்போது திட்டமிடல் பணிப்பாளரின் மேற்பார்வையில் நடவடிக்கையில் மேற்கொள்ளப்படுகின்றன. | தற்போது நிறுவனத்தின் விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவை 2023ம் ஆண்டு செயற்திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| 11 | இனங்கண்ட நிலைபெறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட நிலைபெறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் கொரோனா முடக்க நிலை மற்றும் உத்தியோகத்தர்கள் சுழற்சி முறையிலான கடமைக்கு அழைக்கப்பட்டதன் காரணமாக அளவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது செயலாற்றுகை இலக்குகளை அளவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றதுடன் 2023ம் ஆண்டு செயற்திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| 12 | நிறுவனத்தின் நிலைபெறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலுடன் ஏற்புடைய குறித்துரைத்த தரப்பினர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளை அடைதலுடன் தொடர்புடைய தரப்பினர்களாக இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | இலக்குகளை அடைதலுடன் தொடர்புடைய தரப்பினர்களாக துறைசார் திணைக்கள தலைவர்களும் பிரதேச செயலாளர்களும் இணைக்கப்பட்டுள்ளார்கள். |

| | | | |
|---|---|---|---|
| 13 | சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக ஈடேற்ற வேண்டிய நிலைபெறுதகு அபிவிருத்திப் பணிகளை இணைப்பாக்கம் செய்வதற்காக நியமிக்கப்படவேண்டிய இரண்டு பிரதிநிதிகள் பற்றிய விபரங்கள் அமைச்சுக்கு அறிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலைபெறு அபிவிருத்திப்பணிகளை இணைப்பாக்கம் செய்வதற்காக இரண்டு பிரதிநிதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எனது GA/VA/EB/11/SF/NDM/06/2019ம் இலக்க 2019-10-17ம் திகதி கடிதம் மூலம் நிலைபெறு அபிவிருத்தி தொடர்பான பயிற்சியின் பொருட்டு இரண்டு உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டுள்ளார்கள். |
| 14 | பிரஜைகள் சேவைபெறுனர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படவில்லை. நிறுவனத்தின் பிரஜைகள் சேவைபெறுனர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.. | தற்போது இற்றைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. | தற்போது இற்றைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |
| 15 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் வழுக்கள் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | சரியான முறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. |

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
வவுனியா

ப.அ.சரத்சந்ர
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்
வவுனியா.

பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
வவுனியா

ஜா.கிருபராஜன்
கணக்காளர்
மாவட்ட செயலகம்
வவுனியா.

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Neel Bandara Hapuhinne
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
Home Affairs Division

நீல் பண்டார ஹபுஹின்ன
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக் குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளருக்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2023 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவ மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)
பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.